திரு. து. ப. அழகமுத்து : எஸ்டிமேட் தொகைக்கும், பைனல் பில் தொகைக்கும் மிகவும் வித்தியாசம் இருக்கிறது. அப்படி வருவதற்குக் காரணம் என்ன? கன்டிராக்டர் ஒப்பந்த நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யவில்லை. லீடிங் எல்லாம் இல்லாமலே சர்க்கார் எடுத்துக்கொண்டுவிட்டார்கள் என்று கூறுகிறார்களே? அது உண்மையா?

கனம் திரு. வெ. ராமையா : அப்படி இல்லை.

சோதனைச் சாவடிகள்

* 443 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி : கனம் உணவு அமைச்சர் நயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள உணவு தானிய பரிசோதனை சாவடிகளில் எவ்வளவு உணவு தானியங்கள் கைப்பற்றப்பட்டன, மாவட்டவாரியாக?

(இ) எவ்வளவு உணவு தானியங்களுக்கு மதிப்புத் தொகை வழங்கப்பட்டது?

(உ) எவ்வளவு உணவு தானியங்கள் பறிமுதல் செய்யப்பட்டன, அதற்கான மதிப்புத் தொகை எவ்வளவு?

THE HON. SRI V. RAMAIAH : (a) to (c) A statement [a] is placed on the table of the House.

திரு. எஸ். ஜே. ராமசாமி : ஒவ்வொரு தாலுகாவிற்கும் செக் போஸ்டு இருக்கிறது. அண்மையில் செங்கற்பட்டில் மத்திய அமைச்சர் தாலுகா செக் போஸ்டு நீக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதைப் பற்றி அரசாங்கத்தின் கருத்து என்ன?

கனம் திரு. வெ. ராமையா : என்னிடம் தகவல் இல்லை.

திரு. கோ. சி. மணி : பறிமுதல் செய்யப்பட்ட உணவுப் பண்டங்கள் சரிவர பாமரிக்கப்படாததன் காரணமாக சேதம் அதிகமாக விளைவிக்கப்பட்டிருக்கிறது என்பது உண்மையா? அப்படியிருந்தால் அதனுடைய மதிப்பு என்ன?

கனம் திரு. வெ. ராமையா : அந்தத் தகவல் என்னிடம் இல்லை.

புலவர் கா. கோவிந்தன் : கொடுக்கப்பட்டிருக்கிற அறிக்கையில் செங்கற்பட்டு மாவட்டத்தில் கைப்பற்றப்பட்ட உணவுப் பொருள்கள் 6,449 குவிண்டால் என்றும், மதிப்புத் தொகை வழங்கப்பட்ட உணவு தானியங்கள் 6,064 குவிண்டால் என்றும், பறிமுதல் செய்யப் பட்டது 375 குவிண்டால் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், வட ஆற்காடு மாவட்டத்தில் கைப்பற்றப்பட்டது 1,119 குவிண்டால் என்றும், பறிமுதல் செய்யப்பட்டது 1,075 குவிண்டால் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆக இந்த

[a] Printed as Appendix IV on page 412.

5th November 1966]

மாவட்டத்தில் பறிமுதல் செய்யப்பட்டது அதிகமாகவும் செங்கற்பட்டு மாவட்டத்தில் மதிப்புத் தொகை வழங்கப்பட்டது அதிகமாகவும் பறிமுதல் செய்யப்பட்டது குறைவாகவும் இருக்கிறது. இதற்குக் காரணம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இரண்டு மாவட்டத்தை மட்டும் வைத்து பார்க்கக்கூடாது. பூரா ஸ்டேட்டையும் பார்க்கவேண்டும். அங்கங்கு இருக்கிற நிலைமைக்குத் தகுந்தவாறு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : செக் போஸ்டு தாலூகா வாரியாக ஏற்படுத்தவேண்டும் என்று இருந்தும் கூட, சிறு நகரங்களில் நான்கு வழிகளிலும் செக் போஸ்டுகள் போடப்பட்டு, அதனால் பல தொந்தரவுகள் ஏற்பட்டிருக்கின்றன என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : சில சந்தர்ப்பங்களில் கொள்முதல் நடைபெறுகிறபொழுது கலெக்டர்கள் அங்கங்கே என்னென்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமோ அதை எடுக்கிறார்கள்.

தானியக் கொள்முதல்

* 444 **கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மாநில முழுவதும் 1965 அக்டோபர் முதல் இன்றுவரை நெல், அரிசி, கேழ்வரகு ஆகிய உணவு தானியங்கள் எவ்வளவு கொள்முதல் செய்யப்பட்டது மாவட்டவாரியாக ?

(இ) ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நிர்ணயிக்கப்பட்ட இலக்கு எவ்வளவு, பூர்த்தியடைந்த மாவட்டங்கள் எவை, பூர்த்தியடையாத மாவட்டங்கள் எவை ?

THE HON. SRI V. RAMAIAH : (a) & (b) A statement [a] is placed on the table of the House.

* 445. *Q.*—SRI K. R. SAMBANDAM : Will the Hon. Minister for Food be pleased to state whether levy has been enforced in Thanjavur district for cellection of paddy?

THE HON. SRI V. RAMAIAH : No levy system is in force in Thanjavur district as in other districts of the State. The surpluses of landholders are procured, i.e., whatever surplus is availabe after meeting their domestic consumption requirements, seeds and wages.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம் ஓரளவுக்கு உபரி மாவட்டம் என்ற கருத்தில் அங்கே அதிகமாக நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. நவரை அறுவடைக்குப் பிறகு இப்பொழுது கொள்முதல் வேலை மிகவும்

---

[a] Printed as Appendix V on pages 413–414